# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:235/பேரூ/2025**
**நாள் : 27.10.2025**

P. வெங்குடுசாமி,
வேடசந்தூர்,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேடசந்தூர் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அஞ்சல் , முல்லை தெரு, 65-K5 நேருஜி நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. P. வெங்குடுசாமி என்பவரது 20.06.2025 மற்றும் 05.07.2025 நாளிட்ட மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் முறையே 24.06.2025 மற்றும் 07.07.2025 அன்று பெறப்பட்டு, 235/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அஞ்சல், முல்லை தெரு, 65-K5 நேருஜி நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. P. வெங்குடுசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 20.06.2025 நாளிட்ட புகார் மனுவில் தனது புகாரினை குறிப்பு (Hint) வடிவத்தில் சமர்ப்பித்து இருந்தார். எனவே தனது புகாரினை விளக்கமாக தெரிவிக்கும்பொருட்டு, 05.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“எனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் கடந்த 28.10.2022-ல் காலமாகிவிட்டார். நான் இந்து வாரிசு உரிமை சட்டம் 1956 பிரிவு 8ன்படி IInd Legal Hair ஆவேன்.

நான் ஒரிஜினல் இறப்பு சான்று வாங்கி தற்போது அந்த தேதியில் வீட்டுவரி 2023 மற்றும் 2024 வரை P. கோபாலகிருஷ்ணன் இறந்தவரின் பெயரில் ரசீது பெற்று 65K18 மற்றும் 65K19 1st Floorல் வசித்து வருகிறேன்.

2007 ஆண்டு முதல் மேற்படி 5 வீடுகளுக்கும் தண்ணீர் வரி (2025 வரை) செலுத்தவில்லை. (Misuse of drinking water supply)

இறந்தவர் உயில் P. கோபாலகிருஷ்ணன் - அடுத்தவரின் சொத்து உயில் காண்பித்து R. உமாதேவி , (57) என்பவருக்கு கடந்த 2018ல் உயில் எழுதி கொடுத்ததை காண்பித்து கடந்த 25.03.2023–24ல் 65K15, 16, 17 ஆகிய மூன்று வீடுகளுக்கு மட்டும் வீட்டு வரி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 65K18 மற்றும் 65K19 1st Floor இறந்தவரின் பெயரில் 2024ம் ஆண்டு வீட்டு வரி போடப்பட்டுள்ளது. முறைகேடான உயில் மெய்ப்பிக்கப்படவில்லை.

செயல் அலுவலர் ஓய்வு 28.02.2023 அவர்கள் முதல் மூன்று கதவு எண்கள் 65K15, 65K16, 65K17 மட்டும் R. உமாதேவிக்கு 25.03.2023 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இறந்த வீட்டின் உரிமையாளர் P. கோபாலகிருஷ்ணன் பெயரில் 65K18, 65K19 2004ல் வரி போடப்பட்டுள்ளது. நான் 4 புகார் மனுக்களை செயல் அலுவலருக்கு பதிவு தபாலில் அனுப்பியும் எனக்கு பதில் அளிக்கவில்லை. தற்போது (14.02.2025) P. கேசவன் பெயரில் 5 வீடுகளுக்கு (2025) வீட்டு வரி போடப்பட்டுள்ளது. இது முற்றிலும் பேரூராட்சியின் விதிமுறைகளுக்கு புறம்பாக செய்யப்பட்டுள்ளது.

லேட் G. விஜயலட்சுமி W/o P. கோபாலகிருஷ்ணன் அடி மனையின் சர்வே எண். 717/10 பட்டா இருவரும் போடவில்லை. உயில் - புரபெட் செய்யவில்லை.

P. கோபாலகிருஷ்ணன் 717/1A1A என்ற அடுத்தவரின் சொத்தை எழுதி கொடுத்துள்ளார்.

முன்னாள் ஓய்வுபெற்ற அலுவலர், வேடசந்தூர், உயிலின்படி R. உமாதேவி (57) என்பவரது பெயரில் 65K15, 65K16, 65K17 ஆகிய மூன்று வீடுகளுக்கு வீட்டு வரி பெயர் மாற்றம் செய்துள்ளார். (02.03.2023 மற்றும் 25.03.2023 தேதிகளில்)

ஏன் 65K18, 65K19 ஆகிய இரண்டு வீடுகளுக்கு மேற்கண்ட தேதிகளில் இறந்த P. கோபாலகிருஷ்ணன் பெயரில் ரசீது போடப்பட்டுள்ளது.

தற்பொழுது பழனியப்பன் மகன் P. கேசவன் (52) பெயரில் 5 வீடுகளுக்கும் 14.02.2025ல் பெயர் மாற்றம் செய்துள்ளனர். உயிலுக்கும் Sale Deedக்கும் வீட்டின் பத்திரத்தில் உள்ள விவரங்கள் வேறுபடுகின்றன. சர்வே எண். மற்றும் வீட்டின் கதவு இலக்க விபரம் (3 முதல் 5 வரை உள்ள வீடுகளுக்கு) பணியில் உள்ள செயல் அலுவலர் சரியான பதில் தரவில்லை என்பதை தங்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

2007 முதல் 2025 வரை மொத்தம் 18 ஆண்டுகளுக்கு மேலாக ஏன் தண்ணீர் வரி லேட் P. கோபாலகிருஷ்ணன் பெயரில் பேரூராட்சி நிர்வாகம் வசூல் செய்யாமல் தற்போது 2022லிருந்து

இதுகாறும் புகார் கொடுத்தும் குடிநீர் இணைப்பு துண்டிக்காமல் செயல் அலுவலர் எவ்வித பதில் சொல்ல மறுக்கிறார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிமன்றம் உத்தரவு வரை இறந்த P. கோபாலகிருஷ்ணன் பெயரில் தான் வீட்டு வரி போடவேண்டும் என்றும் மற்றும் சொத்து வரி பெயர் மாற்றம் ரத்து செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. அ. சகாய அந்தோணியூஜின் என்பவர் தனது 25.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.13/2023/ஆ–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு நேருஜி நகரில் கதவு எண்கள் 65K-15, 65K-16, 65K-17, 65K-18 மற்றும் 65K-19 சொத்துவரி விதிப்பு எண்கள். 829, 830, 831, 860, 861-ல் உள்ள வீடு பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் மனுவிற்கு கீழ்க்கண்ட விவரப்படி அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 10வது வார்டு நேருஜி நகரில் கதவு எண்கள் 65K-15, 65K-16, 65K-17, 65K-18, 65K-19 சொத்து வரி விதிப்பு எண்கள். 829, 830, 831, 860, 861-ல் உள்ள வீடு பேரூராட்சி அலுவலக சொத்துவரி கேட்பு பதிவேட்டின்படி திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர் பெயரில் இருந்து வந்தது. திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் முதல் மகன் கோ. நாகேந்திர சுரேஷ்குமார் என்பவர் 29.03.2008-ல் இறந்துவிட்டார். மேற்படியாரின் இரண்டாவது மகன் கோ. தினேஷ் கண்ணன் என்பவர் 18.11.2015-ல் இறந்துவிட்டார். அவர் தமது சொத்துக்களை திருமதி. உமாதேவி க/பெ. நாகராஜ் என்பவருக்கு உயில் சாசனம் பதிவு எண். 339/2018 நாள் 24.08.2018 மூலம் உயில் எழுதி வைத்துள்ளார்.

திரு. கோபாலகிருஷ்ணன் கடந்த 28.10.2022ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி சொத்துக்களை பெயர் மாற்றம் செய்யக் கோரி திருமதி. உமாதேவி க/பெ நாகராஜ் என்பவரால் 02.01.2023 அன்று விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி சொத்தினை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என தெரிவித்து 04.01.2023 அன்று திரு. பெ. வெங்குடுசாமி, த/பெ. பெருமாள்சாமி என்பவரால் ஆட்சேபனை மனு கொடுக்கப்பட்டது. அதற்கிணங்க மேற்படி சொத்து பெயர் மாற்றம் செய்வது குறித்து பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண்.13/2023/அ2 நாள் 18.03.2023 மூலம் அரசு வழக்கறிஞரிடம் சட்டக் கருத்துரை கோரப்பட்டது. 25.03.2023 நாளிட்ட திண்டுக்கல், அரசு வழக்கறிஞரின் சட்ட கருத்துரையில் திருமதி. உமாதேவி க/பெ நாகராஜ் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய சட்டப்படி தடையேதும் இல்லை என சட்டக் கருத்துரு வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் 05.04.2023 அன்று திருமதி. உமாதேவி க/பெ நாகராஜ் என்பவர் பெயருக்கு கதவு எண்கள் 65K-15, 65K-16, 65K-17 சொத்துவரி விதிப்பு எண்கள் 829, 830, 831 ஆகியவை பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 320/2025ன்படி திருமதி. உமாதேவி க/பெ நாகராஜ் என்பவர் கதவு எண்கள் 65K-15, 65K-16, 65K-17, 65K-18, 65K-19 சொத்துவரி விதிப்பு எண்கள் 829, 830, 831, 860, 861ஐ திரு. ப. கேசவன், த/பெ. பழனியப்பன் என்பவருக்கு சுத்தக்கிரையம் செய்து கொடுத்துள்ளார். திரு. ப. கேசவன், த/பெ. பழனியப்பன் என்பவர் மேற்படி தாம் கிரையம் பெற்ற சொத்துக்களை பெயர் மாற்றம் செய்யக்கோரி 14.02.2025ல் விண்ணப்பம் சமர்ப்பித்து பேரூராட்சி அலுவலக மூ.மூ.எண். 44 நாள் 04.03.2025ன்படி திரு. ப. கேசவன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு அனுமதியின்றி பயன்படுத்தியதை கண்டறிந்து 18.06.2025ம் தேதி துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது என்ற விவரத்தினை பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. P. வெங்குடுசாமி மற்றும் எதிர்மனுதாரரான வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 11.09.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. P. வெங்குடுசாமி என்பவர் 11.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- காலஞ்சென்ற P. கோபாலகிருஷ்ணன் மனைவி ஜி. விஜயலட்சுமி கடந்த 23.10.1999 காலமாகிவிட்டார். P. கோபாலகிருஷ்ணன் மனைவி ஜி. விஜயலட்சுமியின் சொந்தமான இடத்தில் ( புல எண். 717/10) வீடு கட்டி தன்னுடைய (P. கோபாலகிருஷ்ணன்) பெயரில் சொத்து வரி கட்டியுள்ளார். குடிநீர் இணைப்புக்கு 18 ஆண்டுகளாக வரி செலுத்தவில்லை.

- 2023-24ஆம் ஆண்டு சொத்துவரி இறந்தவரின் பெயரில் வசூலிக்கப்பட்டுள்ளது. (65K-18 மற்றும் 65K-19)

- 28.10.2022 ஆண்டு முதல் மேற்கூறிய 5 வீடுகளுக்கும் நான் வரி செலுத்தியுள்ளேன்.

- எனது சகோதரர் திரு. P. கோபாலகிருஷ்ணனின் சொத்துக்கள் தொடர்பாக சண்முகம், ரெங்கசாமி மற்றும் நாகம்மாள் மற்றும் எதிர்வாதிகளாக வெங்குடுசாமி, உத்தமி, உமாதேவி மற்றும் கேசவன் ஆகியோரை சேர்த்து தொடர்ந்த வழக்கு எண். OS/0000210/2025 சார்பு நீதிமன்றம், வேடசந்தூரில் நிலுவையில் உள்ளது.

- எனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் 28.10.2022 அன்று காலமாகிவிட்டார். எனவே இந்து வாரிசு உரிமை சட்டத்தின்படி நான் இரண்டாவது வாரிசுதாரராவேன். இந்நிலையில், R. உமாதேவி என்பவர் மேற்படி இறந்த எனது சகோதரரின் சொத்து உயிலினை காண்பித்து கதவு எண்கள் 65K-15,16,17 ஆகிய மூன்று வீடுகளுக்கு சொத்து வரி உமாதேவி என்ற பெயரில் மாற்றம்

செய்யப்பட்டுள்ளது. கதவு எண்கள் 65K-18 மற்றும் 19 ஆகிய இரண்டு வீடுகளும் இறந்த எனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் என்ற பெயரில் இருந்து வந்தது.

- மேலும், வீடுகளுக்கு 2007-ஆம் ஆண்டு முதல் 2025 வரையிலான 18 ஆண்டு காலத்திற்கு குடிநீர் வரி வசூலிக்கப்படாமல் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.
- எங்கள் வீட்டின் அருகில் உள்ள குறுக்குத் தெருவில் 12 அடி நீளத்திற்கு கழிவுநீர் கால்வாய் தோண்டி, அப்பணியை சரியாக முடிக்காதவுள்ளதால் துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே இப்பணியை உடனடியாக முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.
- எனது சகோதரரின் உயில் சாசனம், கிரையப்பத்திரம் (Sale Deed) மற்றும் வீட்டின் பத்திரத்தில் உள்ள விவரங்கள் வேறுபாடுகள் உள்ளன. எனவே மேற்படி 5 வீடுகளுக்கும் இறந்த எனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் பெயரிலேயே சொத்துவரியினை மீண்டும் மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. அ. சகாய அந்தோணியூஜின் என்பவர் 11.09.2005 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு நேருஜி நகரில் கதவு எண்கள். 65K-15, 65K-16, 65K-17 65K-18, 65K-19 (சொத்துவரி விதிப்பு எண்கள். 829, 830, 831, 860 மற்றும் 861)-ல் உள்ள வீடுகள் திரு. கோபாலகிருஷ்ணன் என்ற பெயரில் இருந்து வந்தது. திரு. கோபாலகிருஷ்ணன் தனது மேற்படி சொத்துக்களை திருமதி. உமாதேவி க/பெ. நாகராஜ் என்பவருக்கு 24.08.2018 அன்று உயில் சாசனம் மூலம் உயில் எழுதி வைத்துள்ளார். (உயில் சாசனம் பதிவு எண். 339/2018 நாள் 24.08.2018).
- இந்நிலையில், திருமதி ஆர். உமாதேவி என்பவர் மேற்காணும் சொத்துக்களை தனது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்திட 02.01.2023 அன்று விண்ணப்பம் அளித்தார். இதனை வெங்குடுசாமி என்பவர் ஆட்சேபனை தெரிவித்ததின்பேரில், இந்நேர்வு குறித்து அரசு வழக்கறிஞர் திண்டுக்கல் அவர்களின் சட்டக் கருத்துரை கோரப்பட்டதில் சொத்துவரி பெயர் மாற்றமானது திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் பெயரிலிருந்து திருமதி. உமாதேவி பெயருக்கு மாற்றம் செய்திட எவ்வித தடையில்லையென தனது கருத்துரை அளித்துள்ளார். இதன் அடிப்படையில் கதவு எண்கள் 65K-15,16,17 ஆகிய மூன்று வீடுகளுக்கும் திருமதி. உமாதேவி என்ற பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இதனைத் தொடர்ந்து திருமதி. உமாதேவி மேற்காணும் 5 வீடுகளையும் திரு. ப. கேசவன் என்பவருக்கு 29.01.2025 அன்று சுத்த கிரையம் செய்து கொடுத்துள்ளார். (வேடச்சந்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 320/2025).

- சுத்த கிரையம் மூலம் பெற்ற மேற்படி சொத்துக்களுக்கு தனது பெயரில் சொத்துவரி செய்திட திரு. கேசவன் என்பவர் 14.02.2025 அன்று பேரூராட்சியில் விண்ணப்பம் செய்ததில் 04.03.2025 அன்று திரு. கேசவன் பெயருக்கு 5 வீடுகளுக்கும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்த குடிநீர் இணைப்பு அனுமதியின்றி பயன்படுத்தியதை கண்டறிந்து 18.06.2025 அன்று துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. P. வெங்குடுசாமி என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வேடசந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. P. வெங்குடுசாமி என்பவர் தனது 20.06.2025 மற்றும் 05.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுக்களில் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 717/10-ல் முல்லைத் தெருவில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு காலமான தனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் என்பவரின் பெயரில் இருந்த சொத்து வரியை முறைகேடாக P. கேசவன் என்ற பெயரில் மாற்றம் செய்தும், கடந்த 18 வருடங்களாக குடிநீர் கட்டணம் செலுத்தப்படாமல் இருப்பதால் வேடசந்தூர் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்து மேற்படி சொத்துக்களை மீண்டும் தனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டு நேருஜி நகரில் கதவு எண்கள். 65K-15, 65K-16, 65K-17, 65K-18, 65K-19 (சொத்துவரி விதிப்பு எண்கள். 829, 830, 831, 860 மற்றும் 861 )-ல் உள்ள வீடுகள் திரு. கோபாலகிருஷ்ணன் என்ற பெயரில் இருந்து வந்தது. திரு. கோபாலகிருஷ்ணன் மேற்படி சொத்துக்களை திருமதி. உமாதேவி க/பெ. நாகராஜ் என்பவருக்கு 24.08.2018 அன்று உயில் சாசனம் மூலம் உயில் எழுதி வைத்துள்ளார். (உயில் சாசனம் பதிவு எண். 39/2018 நாள் 24.08.2018). P. கோபாலகிருஷ்ணன் 28.10.2022 அன்று காலமாகிவிட்டார்.

மேற்படி உயிலை அடிப்படையாக கொண்டு திருமதி ஆர். உமாதேவி பேரூராட்சியில் விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில் கதவு எண். 65K-15, 65K-16 மற்றும் 65K-17 கொண்ட வீடுகளுக்கான சொத்துவரி திருமதி. உமாதேவி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கதவு எண். 65K-18, 65K-19 வீடுகள் P. கோபாலகிருஷ்ணன் பெயரில் சொத்துவரி இருந்து வந்தது.

இதன் தொடர்ச்சியாக திருமதி உமாதேவி மேற்காணும் 5 வீடுகளையும் திரு. ப. கேசவன் என்பவருக்கு 29.01.2025 அன்று சுத்த கிரையம் செய்து பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (வேடசந்தூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண். 320/2025). எனவே திரு. கேசவன் என்பவர் பேரூராட்சியில் விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் மேற்காணும் வீடுகளின் சொத்து வரியானது திரு. கேசவன் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர் திரு. வெங்குடுசாமி என்பவர் தனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் என்பவருடைய உயில்சாசனம், கிரையப்பத்திரம் மற்றும் வீட்டு பத்திரம் ஆகியவற்றில் உள்ள விவரங்கள் வேறுபாடுகள் உள்ளதாலும், தான் இந்து வாரிசு உரிமைச் சட்டத்தின் கீழ் இரண்டாவது வாரிசுதாரர் ஆவேன் என்பதாலும் மேற்காணும் 5 வீடுகளின் சொத்துவரியினை மீண்டும் P. கோபாலகிருஷ்ணன் பெயரிலேயே மாற்றிட வேண்டியுள்ளதை மனுதாரரது வாக்குமூலத்தில் இருந்து தெரிய வருகிறது.

இதற்கிடையில், திரு. P. கோபாலகிருண்ணன் என்பவரின் சகோதரியான திருமதி. நாகம்மாள் மற்றும் அவரது மகன்களான திரு. சண்முகம் மற்றும் திரு. ரெங்கசாமி என்பவர்கள் இரண்டாம் நிலை வாரிசுகள் அடிப்படையில் திரு. கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான மேற்காணும் 5 வீடுகளையும் பாகப்பிரிவினை செய்து சொத்துக்களில் நான்கில் இரண்டு பங்கினை வழங்கிட உரிய ஆணை பிறப்பிக்கக் கோரி வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். OS/0000210/2025) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் ஆவணம் வாயிலாகவும் அறிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries ActÏ 1952 or any matter pending before a Court.;

இந்நிலையில் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தனது சகோதரர் P. கோபாலகிருஷ்ணன் பெயரிலேயே மீண்டும் சொத்து வரியினை மாற்றம் செய்திட கோரும் சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை மூலம் சொத்துரிமை கோரி திரு. P. கோபாலகிருஷ்ணன் என்பவரின் சகோதரி திருமதி. நாகம்மாள் என்பவரால் வேடசந்தூர் சார்பு நீதிமன்றத்தில் (OS/0000210/2025) வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மேற்காணும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10(3)(b)ன்படி இப்புகாரினை விசாரிக்க இயலாது என்பதால் இப்புகார் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P. வெங்குடுசாமி,
65-K5, நேருஜி நகர்,
முல்லை தெரு,
வேடசந்தூர் - 624 710,
திண்டுக்கல் மாவட்டம் .

2) செயல் அலுவலர்,
வேடசந்தூர் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/10/25
செயலாளர்
29/10/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032